செ.வெ.எண்: 678 /2016 நாள்: 28.09.2016

# பத்திரிக்கை செய்தி

நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள துப்பாக்கி உரிமம் பெற்ற அனைத்து துப்பாக்கி உரிமைதாரர்களும் தங்கள் வசம் வைத்ததுள்ள உரிமம் பெற்ற துப்பாக்கிகளை அருகிலுள்ள காவல் நிலைய பொறுப்பு அலுவலரிடம் தவறாது உடனடியாக ஒப்படைக்குமாறு மாவட்ட ஆட்சியர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். தேர்தல் காலத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து தேர்தல் ஆணையத்தால் தேர்தல் முடிவுபெற்று மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 பிரிவு 144-ன் படி துப்பாக்கி உரிமம் பெற்ற உரிமதாரர்கள் துப்பாக்கிகளை பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. எனவே துப்பாக்கி உரிமதாரர்கள் அருகிலுள்ள காவல் நிலையத்தில் உடனடியாக துப்பாக்கிகளை ஒப்படைக்க வேண்டும். துப்பாக்கிகளை ஒப்படை செய்யாமல் பதுக்கி வைத்திருந்தால் அத்தகைய நபர்கள் மீது படைக்கலச் சட்ட விதிகளின் படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். காவல் நிலையங்களில் ஒப்படைப்பில் வைக்கப்படும் துப்பாக்கிகள் தேர்தல் பணிகள் முடிவுற்ற பின்னர் சம்பந்தப்பட்ட உரிமைதாரர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்படும். எனவே குமரி மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்படாதவாறு துப்பாக்கி உரிமம் பெற்ற உரிமதாரர்கள் துப்பாக்கிகளை உடனடியாக அருகில் உள்ள காவல் நிலைய பொறுப்பு அலுவலர்களிடம் ஒப்படைத்து மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு மாவட்ட ஆட்சியர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கேட்டுக் கொண்டுள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.